முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1114

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.10.2022, திங்கட்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா வாழ்க வாழ்க
அன்னதான சேவையாற்றும் தேசிகா வாழ்க வாழ்க
மாறுதலை மக்களுக்கு செய்தருளி
மரணத்தை வெல்லும் மகா வரத்தை தந்தருளும்
2. அருளுகின்ற ஆற்றலாய் அவதாரம் புரிந்த
ஐயனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 30 ம் நாள் 17.10.2022, திங்கட்கிழமை)
வழங்குவேன் உன் சக்தி மேலும் பெருகி நிற்க
3. நிற்கவே உந்தனுக்குள் யானிருந்து
நித்தம்நித்தம் ஆக்கம் தந்து வருகின்றேன்
சிந்தைபட உன்னை எண்ணி கலியுகத்தில்
சித்திகளை பெறவேண்டி வருபவரெல்லாம்
4. வருபவர்க்கெல்லாம் அரங்கன் உன் கரம்பட
வடிவேலன் சக்திகளை தந்தருள்வேன்
தந்தருளி அவரவரும் விரும்புகின்ற
தவயோக சித்திகளை இயல்பாக
5. முந்தை பிறவிப் பயனாகவே
முழுமைபட ஈதூழில் தானடைந்து
அடைந்து அன்னவர்கள் எல்லாம்
அரங்கன் வழி ஞானிகளாக கடைத்தேற
6. கடைத்தேற உபாயத்தை அரங்கன் உன்வழி
கட்டாயம் வரமாக யான் அருள்வேன்
அருளவே அரங்கன் நின் தர்மத்தை
அலங்கரிக்கும் தொண்டர் படை அனைவருக்கும்
7. ஆறுமுகன் என் அருளும் தயவும் உண்டு
அரங்கா முருகா என ஜெபதபத்தை
ஜெபதபத்தை நித்தம்செய்யும் அன்பர்கட்கு சித்திகள் ஈதூழே உண்டுஉண்டு
அபயமென ஆறுமுகன்தானிறங்கி அரங்கன் நாமம்போற்றும் அனைவருக்கும் சித்திவழங்குவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–